## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 05.03.2026 ஆம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் நமக்கு நாமே திட்டத்தின் (NNT) கீழ் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 20.01.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்-10 சக்தி நகர் பகுதியில் புதிய பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 9,00,000 | திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் | -0.06% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S KS&CO CONTRACTOR | 0.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு உத்திரவு கடிதம் வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1480**

2. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.1186 நாள்.15.05.2025 இல் அனுமதி அளித்துள்ளதன் பேரில், காலை உணவு வழங்கும் திட்டம் தொடக்க விழாவினை மண்டபத்தில் 09.02.2026 அன்று ஏற்பாடு செய்து 262 நிரந்திர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு காலை விருந்து ஏற்பாடு செய்து, உணவினை வாழை இலையில் பரிமாறியும், இனிப்புகள் வழங்கியும், பிளக்ஸ் பேனர்கள், வாழைமரம், டேபிள் கிளாத் போட்டோ மற்றும் வீடியோ ஆல்பம் ஏற்பாடு செய்தமைக்கும் டிரம்ஸ் ஏற்பாடு செய்தமைக்கும் உத்தேச செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.753/2025/எச்1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1481**

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக துணை இயக்குநர் (நகரமைப்பு) அவர்களால் 07.11.2025 அன்று நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தின் நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் குறித்த விவரங்களை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 128 இன் படி தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய எதுவாக நகர் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் குறித்த விவரங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடந்து இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசாணை (பல்வகை) எண். 852 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 17.11.1989 இன் படி பூங்காக்கள் – 1, விளையாடுமிடங்கள் – 4 மற்றும் திறவிடங்கள் – 1 எண்ணிக்கைகள், அரசிதழ் 05.07.1990 அன்று வெளியிடப்பட்ட வகையில் பூங்காக்கள் – 14, விளையாடுமிடங்கள் – 09, திறிவிடங்கள் – 23 எண்ணிக்கைகள் மற்றும் அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டிய பூங்காக்கள் – 94, விளையாடுமிடங்கள் –03, மற்றும் திறவிடங்கள் – 11 எண்ணிக்கையினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 126ன் படி தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய ஏதுவாக நகர் மன்றத்தில் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.441/2022/எப்1)

**அலுவலக குறிப்பு:–** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1482**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு 12.02.2026 ஆம் தேதியன்று பொது (ம) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கடைகளுக்கு நடைபெற்ற பொது (ம) மறு ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை.

புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண் 01 மற்றும் 02 இரண்டு கடைகளுக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 01 | திரு.K.M.சிலம்பரசன்<br>த/பெ. முருகன்.<br>281/5B, ஜெய்துர்க்கை நகர்,<br>கோபிசெட்டிபாளையம். | **ரூ.8,000/–** |
| | | திரு.K.முருகன்.<br>த/பெ. கருப்புசாமி.<br>281/5B, ஜெய்துர்க்கை நகர்,<br>கோபிசெட்டிபாளையம். | **ரூ.7,550/–** |
| 2 | புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 02 | திரு.K.M.சிலம்பரசன்<br>த/பெ. முருகன்.<br>281/5B, ஜெய்துர்க்கை நகர்,<br>கோபிசெட்டிபாளையம். | **ரூ.8,000/–** |
| | | திரு.K.முருகன்.<br>த/பெ. கருப்புசாமி.<br>281/5B, ஜெய்துர்க்கை நகர்,<br>கோபிசெட்டிபாளையம். | **ரூ.7,550/–** |

வரிசை எண் 1 இல் கண்டுள்ள, புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 01 க்கு திரு.K.முருகன் த/பெ. கருப்புசாமி. என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,550/– ஐ விட கூடுதலாக ரூ.450/– சேர்த்து திரு.K.M.சிலம்பரசன் த/பெ. முருகன் என்பவர் ரூ.8,000/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்.

வரிசை எண் 2 இல் கண்டுள்ள, புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 02 க்கு திரு.K.முருகன் த/பெ. கருப்புசாமி. என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,550/– ஐ விட கூடுதலாக ரூ.450/– சேர்த்து திரு.K.M.சிலம்பரசன்த/பெ. முருகன் என்பவர் ரூ.8,000/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில், புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 01 மற்றும் புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்: 02 கொண்ட இரண்டு கடைக்களுக்கும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,000/–குறிப்பிட்டுள்ள

திரு.K.M.சிலம்பரசன் த/பெ. முருகன் என்பவருக்கும் கடை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் ஏலம் போகாத மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1567/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1483**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கு 267 எண்ணிக்கை சிறுவிசை மின் மோட்டார்கள் இயக்கப்படுகிறது. இவைகள் வார்டு எண்–1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோக பயன்பாட்டிற்கு இயக்கப்படுகிறது. 1.00 HP முதல் 5.00 HP வரை சப்மர்சிபிள் மின் மோட்டார்கள் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் இயக்கப்படுகிறது. இவைகள் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் மின்மோட்டார் காயில் ரிவைண்டிங் செய்தல், பம்பு உதிரி பாகங்கள் பொருத்துதல், ஸ்டார்டரில் ஏற்படும் பழுதுகள், மின் உபகரணங்கள் பொருத்துதல் ஆகிய பணிகள் அவ்வப்பொழுது சரி செய்து இயக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிகள் 2026–2027 ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.50/–இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :– 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவீன தொகை ரூ.10.50/– இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1484**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்றும் நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. அங்கு ரா வாட்டர் மின் மோட்டார் 120 HP மற்றும் கிளீயர் வாட்டர் மின் மோட்டார் 180HP திறன் இயக்கப்படுகிறது. ரா வாட்டர் ஆற்று தண்ணிர் சுத்தம் செய்வதற்கு 6 எண்ணிக்கை பில்டர் மீடியா உள்ளது. சுத்தம் செய்த குடிநீர் Chemical முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கு குளோரின் பிளான்ட் 2 எண்ணிக்கையில் உள்ளது. Chlorine Liquid Gas சிலிண்டர் மூலம் பொருத்தப்பட்டு Pre Chlorination மற்றும் Post Chlorination முறையில் குளோரின் கலந்து நகர பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு தினமும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 20 நாட்கள் வீதம் 2 சிலிண்டர் தேவைப்படுகிறது. வருடத்திற்கு 36 சிலிண்டர் தேவைப்படுகிறது. 2026–2027 ஆம் ஆண்டு குளோரின் கேஸ் வாங்க மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, அத்தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

.

**அலுவலகக்குறிப்பு :–** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்காலம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1485**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2026 –2027 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் மற்றும் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது. (ந.க.எண். 725/2020/பி1).

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அங்கீகரிக்கலாம்.
**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. தீர்மான எண்.1486**

8. இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து அடிக்க பயன்படுத்தப்படும் மாலத்தீயான் மருந்தினை கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 1418 நாள்.21.01.2026 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் மருந்துகளை விநியோகம் செய்ய 17.02.2026 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மருந்துகளை விநியோகம் செய்ய வழங்கிய விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Murugan & Co,<br>No. 65E-1, Pallipalayam Road,<br>Kumarapalayam,<br>Namakkal - 638 183. | ரூ. 960/- |
| 2. | M/s. Adithya Agencies.<br>No. 9/182/A 25,<br>K.M.R. Nagar,<br>Erode – 638 316. | ரூ.1080/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள Murugan & Co, No. 65E-1, Pallipalayam Road, Kumarapalayam, Namakkal - 638 183 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற ஒன்றையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தினரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**ந.க.எண்.2670/2025/எச்1**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1487**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நராட்சிக்குட்பட்ட காளியண்ணன் எக்ஸ்டன்சன்-3, ராமசாமி வீதி நாய்க்கன் காடு, தாசப்பன் வீதி -3 வது தெரு, சின்னசாமி வீதி-5, மாருதி நகர் மற்றும் நகராட்சியின் பிற பகுதிகளில் HDPE தொட்டிகளில் இருந்து தண்ணீர் குழாய் நீட்டிப்பு செய்யும் பணி மேற்கொள்ளுதல். | 5,00,000 | M/S DN CONSTRUCTION | 0.06% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு. லோகநாதன் ஒப்பந்ததாரர் | 6.69% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S DN CONSTRUCTION ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1488**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2026 – 2027ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் கீழ்காணும் விபரப்படியான பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினங்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் இலட்சத்தில் ரூ |
|---|---|---|
| 1 | கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான BT மருந்து, மற்றும் இதர பூச்சிகள் கட்டுப்படுத்தும் மருந்துகள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினம் | 5.00 |
| 2 | பொது சுகாதாரப்பிரிவிற்கு தினசரி பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினிகளான பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத் தூள், ஆசிட் மற்றும் பினாயில் மற்றும் இதர தேவைப்படும் பொருட்கள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினம் | 12.00 |
| 3 | தூய்மைப் பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினம் | 6.00 |
| 4 | தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சீருடைகள், தையல் கூலி மற்றும் காலணிகள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினம் | 6.00 |
| 5 | துப்புரவு பிரிவு வாகனங்கள் பழுதுப் பணிகள் செய்ய (தகுதிச்சான்று புதுப்பித்தல் பணிகள் உட்பட), டயர் டியூப், பேட்டரி வாங்க, சாலை வரி, காப்பீட்டு தொகை மற்றும் பசுமை வரி செலுத்த ஆகும் செலவினம் | 12.50 |
| 6 | துப்புரவு பிரிவு வாகனங்கள், கொசு ஒழிப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும், கொசு மருந்துகள் கலந்து தெளிக்க டீசல் மற்றும் பவர் ஸ்ப்ரேயர்கள், புகைத்தெளிப்பான் இயந்திரங்கள் மற்றும் மிஷின்கள் போன்றவற்றிக்கு பெட்ரோல், டீசல், மற்றும் கிரீஸ் பிடிப்பதற்கு ஆகும் செலவினம் | 16.00 |
| 7 | நுண் உரக்குடில் மையத்தில் மட்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்க உபயோகப்படுத்தப்படும் இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், மூன்று MCC மையங்களுக்கும் TNPCB யிலிருந்து வழங்கப்பட்ட Consent to operate அனுமதியினை புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதற்கு ஆகும் செலவினம் | 2.50 |
| 8 | மட்காத குப்பைகளான பிளாஸ்டிக், பேப்பர், துணிகள் போன்றவற்றை பண்டல் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் Balling Machine, Incinarator ஆகியவற்றில் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை செப்பனிடவும் மற்றும் அதற்குத் தேவையான பிளாஸ்டிக் கயிர்கள் வாங்க ஆகும் செலவினம் | 2.50 |
| 9 | பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பைண்டிங் செய்து பராமரிக்க ஆகும் செலவினம் | 0.65 |
| 10 | பொது சுகாதாரப்பிரிவு நாளிதழ் விளம்பரக் கட்டணம் மற்றும் வழக்குக் கட்டணம் ஆகும் செலவினம் | 3.00 |
| 11 | பொது சுகாதாரப்பிரிவில் அவ்வபோது ஏற்படும் சில்லறைச் செலவினங்களை துப்புரவு அலுவலர் நிரந்தர முன்பணத்திலிருந்து மீளப் பெறுதல் (SO Permanent Advance) ஆகும் செலவினம் | 1.00 |

| | | |
|---|---|---|
| 12 | கொசு ஒழிப்பு இயந்திரங்களான ஸ்ப்ரேயர்கள், Fogging machine ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் சரிசெய்தல் ஆகும் செலவினம் | 2.50 |
| 13 | பயோ கேஸ் பிளான்டில் உள்ள இயந்திரங்கள் மற்றும் பலூன்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் ஆகும் செலவினம் | 2.00 |
| 14 | விழிப்புணர்வு ப்ளெக்ஸ் போர்டுகள், சுவர் விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் ஆகும் உத்தேச செலவினம் | 1.00 |
| 15 | ஈமச்சடங்கு ஈமக்கிரிய சடங்கிற்கு ஆகும் செலவினத் தொகை | 5.00 |
| 16 | பொதுசுகாதார பிரிவில் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொண்டு இதர செலவினங்களை தன்னால் செலவிடப்படும் அலுவலருக்கு தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை | 3.00 |

வரிசை எண் 1 இல் உள்ள கொசு ஒழிப்பு மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் (TNMSC) நிறுவனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதத்தில் அவ்வபோது தேவைக்கேற்ப கொள்முதல் செய்து பயன்படுத்தி கொள்ளவும், அதற்கென குறிப்பிட்டுள்ள செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள சீருடைகளை தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஈரோடு, கோ – ஆப் டெக்ஸ் நிறுவனத்தில் அந்நிறுவனத்தின் விலைவிகிதத்தில் கொள்முதல் செய்து கொள்ளவும், பணியாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள தையற்கூலி வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண் 6 இல் குறிப்பிட்டுள்ள எரிபொருட்களான பெட்ரோல், டீசல், ஆயில், கிரீஸ் போன்றவைகளை இந்நகராட்சியின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட டீலரான Sri Balamurugan Agencies Gobichettipalayam நிறுவனத்திடமிருந்து நிர்ணயம் செய்யும் விலை விகிதத்தில் கொள்முதல் செய்து பயன்படுத்தி கொள்ள, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண் 12 இல் குறிப்பிட்டுள்ளவாறு Fogging machine களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை புகைத்தெளிப்பான் மெஷின்கள் விநியோகம் மற்றும் பழுதுகளை சரிசெய்வதில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனத்தில் பழுதுகளை சரிசெய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண் 14 இல் குறிப்பிட்டுள்ளவாறு விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை அவ்வப்போது தேவைக்கேற்ப உள்ளூர் நிறுவனங்களில் தயார் செய்யவும் அச்சகங்களில் அச்சடித்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. 2 தீர்மான எண்.1489**

11. இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதாரபணிகளை மேற்கொள்ள JCB இயந்திரம் இல்லாததால் அவ்வப்போது சாக்கடையில் உள்ள மண் அடைப்பு நீக்குவதற்கும். சாக்கடை மேல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், பார்க் பகுதிகளில் மரம் நடுவதற்கு குழி தோண்டுவதற்கும் போன்ற அத்தியாவசிய பணிகளுக்கு தனியார் JCB வாகனம் கொண்டு பணிகள் மேற்கொள்ள 2026 – 2027 ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2638/2025/எச்1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1490**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–26இல் உள்ள சிவசண்முகம் வீதியில் உள்ள கை பம்பிற்கு மாற்றாக சிறு மின்விசை பம்பு அமைத்து HDPE தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 1,80,000 | திரு. லோகநாதன் ஒப்பந்ததாரர் | 0.17% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S DN CONSTRUCTION | 5.37% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. லோகநாதன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1491**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–30இல் செங்கோட்டையன் காலனியில் உள்ள சமுதாய கழிப்பறைக்கு போர் வெல் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 3,00,000 | திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் | 0.06% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S KS&CO CONTRACTOR | 15.86% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள P.தங்கவேல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1492**

14. இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள புற்கள், செடிகொடிகள், தெருக்கள் போன்றவற்றில் வளரும் புல்செடிகளை அகற்ற புல் அறுக்கும் இயந்திரங்கள் (Bush Cutter Machines) 4 எண்ணிகையினை கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 1415 நாள்.21.01.2026 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் புல் அறுக்கும் இயந்திரங்கள் விநியோகம் செய்ய 19.02.2026 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | புல் அறுக்கும் இயந்திரங்கள் விநியோகம் செய்ய வழங்கிய ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | Sun Light Electronics,<br>240/24c Sathy Main Road,<br>Opp.MuthuMahal,<br>Gobichettipalayam- 638 452. | ரூ. 24,200/- |
| 2. | Vijaya Agro Agencies,<br>349 Nehru Street,<br>Ram Nagar,<br>Covai – 641 009. | ரூ.24,500/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள Sun Light Electronics, 240/24c Sathy Main Road, Opp.Muthu Mahal, Gobichettipalayam 638 452 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றறொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தினரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.2670/2025/எச்1**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1493**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்-18 கரட்டூர் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (MCC)-இல் பணிபுரியும் இரவுக்காவலருக்கு குடியிருப்பு அறை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 1,50,000 | திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் | 0.08% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S KS&CO CONTRACTOR | 37.75% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள P.தங்கவேல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1494**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் ஐந்து இடங்களில் உணவு அருந்தும் தூய்மை பணியாளர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, கை அலம்பும் வசதி மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | 4,00,000 | திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் | 0.28% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S KS&CO CONTRACTOR | 8.73% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.P.தங்கவேல் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1495**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள கடைகளுக்கு புதிதாக படிகட்டுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 6,00,000 | M/S UNITED ENGINEERS | 0.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S SS PACHAIAMMAN CONTRACTOR | 6.86% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1496**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30–வார்டுகளில் உள்ள போர் மோட்டார்கள் அதிக தேய்மானம் அடைந்து விட்டதால் புதியதாக 1.5HP போர் மோட்டார்கள் அமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 4,00,00 | M/S EXPLOSIVE ENTERPRISES | 0.07% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.22% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S EXPLOSIVE ENTERPRISES ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1497**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சுப்பண்ணன் வீதி, குப்பம்மாள் லே அவுட், பெரியண்ணன் வீதி, உப்புகிணறு, விவேகானந்தர் வீதி, கோசலை நகர் ஆகிய பகுதிகளில் HDPE தொட்டிகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல். | 1,54,000 | M/S DN CONSTRUCTION | 2.11% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு. லோகநாதன் ஒப்பந்ததாரர் | 1.53% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S DN CONSTRUCTION ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1498**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.02.2026 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–18இல் உள்ள கரட்டூர் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC)–க்கு போர் வெல் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 3,00,000 | M/S SHRI GOGUL AGENCIES | 0.16% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S DN CONSTRUCTION | 4.49% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S SHRI GOGUL AGENCIES ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1499**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில்

1. பேருந்து நிலையம் 500 LPH RO Plant
2. தாய்சேய் நலவிடுதி 250 LPH RO Plant
3. அம்மா உணவகம் 250 LPH RO Plant
4. நகராட்சி அலுவலகம் 250 LPH Po plant

ஆகிய இடங்களில் சுத்திகரிப்பு கருவி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி, சுத்திகரிப்பு இயந்திரத்தினை தனியார் சேவை மூலம் 2026–2027 ஆம் ஆண்டு பராமரிப்பு செய்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000 ஆகும். மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் இதனை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1500**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு RO Plant அமைக்கப்பட்டுள்ளது.

1. வேங்கமையார் உயர்நிலைப்பள்ளி – 250 LPH
2. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி – 250 LPH
3. நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி – 250 LPH
4. நகராட்சி மேல்நிலைப்பள்ளி மொடச்சூர் – 250 LPH
5. நகராட்சி துவக்கப்பள்ளி மொடச்சூர் – 250 LPH

மேற்கண்ட பள்ளிகளில் சுத்திகரிப்பு கருவி RO Plant அமைக்கப்பட்டு (4 எண்கள்) ஏழு ஆண்டு மேலாகிறது. (1 எண்) மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே, அடிக்கடி பழுது ஏற்படுவதால் மாணவ மாணவியர்களுக்கு தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது.

மேற்கண்ட பள்ளிகளில் உள்ள சுத்திகரிப்பு கருவிகள் (Ro Plant) தனியார் சேவை மூலம் வருடாந்திர பாரமரிப்பு மேற்கொள்ள 2026–27 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,25,000 ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1501**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–19 குப்பாண்டவர் வீதி 6&7 பகுதியில் இரண்டு ஆழ்துளை கிணற்று கைபம்பு உள்ளது. மேற்கண்ட, ஆழ்துளை கிணறுகள் பொது மக்களுக்கு பயன்படாத நிலையிலும் போக்குவரத்துக்கு இடையூறாகவும் உள்ளது. எனவே, மேற்கண்ட கை பம்புகளை அகற்ற 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். மேற்கண்ட ஆழ்துளை கிணற்று கைபம்யை அகற்றிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1502**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் 30–வார்டுகளிலும் அமைக்கப்பட்ட குடிநீர் விநியோக குழாய்களின் நீளம் 142.00 கி.மீ, தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள பத்து மண்டலங்களில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நீர் உந்து குழாய் நீளம் 17.304 கி.மீ (Pumping Main), சுலீஸ் வால்வுகள் 321 எண்களும் , Flow Control Motor, 45 எண்கள் மற்றும் PRV 5 எண்களும் குடிநீர் விநியோகத்தில் இயக்கப்பட்ட பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் மேற்கண்ட குடிநீர் விநியோக குழாய், குடிநீர் உந்துகுழாய், சுலிஸ் வால்வுகளை பராமரிக்க, ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய போதிய ஆட்கள் இந்நகராட்சியில் இல்லை.

எனவே, தடையில்லாமல் குடிநீர் விநியோகம் செய்ய மேற்படி, பராமரிப்பு பணிகளை தனியார் சேவை பயன்படுத்தி 2026–2027 ம் ஆண்டுக்கு பராமரிப்பு பணி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.11.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரவும் இதனை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1503**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 பஜனை கோவில் லேன்–2ல் உள்ள கை பம்பிற்கு மாற்றாக சிறு மின்விசை பம்பு அமைத்து HDPE தொட்டி அமைத்து தர கோரியுள்ளனர். மேற்கண்ட பகுதியில் சிறு மின்விசை பம்பு, HDPE தொட்டி மற்றும் நீட்டிப்பு குழாய் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதனை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1504**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள நவீன கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிம்ம் மற்றும் பேருந்து நிலைய தூய்மை பாரத நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆகிய இரண்டு குத்தகை இனங்களும் இதுநாள் வரை நடைபெற்ற பொது ஏலத்தில் முன்வைப்புத்தொகையும் ஏலத்தொகையும் அதிகமாக உள்ளது என தெரிவித்து எவரும் கலந்து கொள்ள வில்லை மேலும் இரண்டு கட்டணக் கழிப்பிடங்களும் அருகருகே உள்ளதால் தனித்தனியாக ஏலம் கோர யாரும் முன்வருவதில்லை.

எனவே இக்கட்டணக் கழிப்பிடங்களை 05.07.2025 முதல் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதுநாள் வரை 10 முறைக்கு மேல் ஏலம் கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை, நாளென்றிற்கு 2400 வீதம் ஆண்டு ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.8,70,000/- வசூல் ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.. மேற்படி வசூலில் மின்கட்டணம், பணியாளர்களின் ஊதியம் மற்றும் கழிப்பிட பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இச்செலவினத்தை நகராட்சியால் மேற்கொள்ளப்படுவதால் இக்குத்தகை இனத்தின் மூலம் இந்நகராட்சிக்கு குறைந்த வருவாய் மட்டுமே ஈட்டப்படுகிறது. இது தொடர்பாக நகராட்சி ஏலதாரர்கள் தங்களது 12.02.2026 ம் தேதிய மனுவில் அருகருகே உள்ள கட்டண கழிப்பிடங்களை ஒரே இனமாகவும் மேலும் முன்வைப்புத் தொகையினை குறைத்து ஏலம் விட்டால் ஏலம் போக வாய்ப்புள்ளதாக என தெரிவித்துள்ளார்கள் .

மேற்கண்ட சூழ்நிலையில் அருகருகே உள்ள இரண்டு கட்டண கழிப்பிடங்களையும் ஒன்றாக இணைத்தும், இரண்டு கட்டண கழிப்பிடங்களுக்கும் சென்றாண்டு நகராட்சியால் ஏலம் வழங்கப்பட்ட குத்தகைத் தொகைக்கு குறைவில்லாமல் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் என்ற ஒரே இனத்தில் ஒன்றாக இணைத்து 01.04.2026 முதல் ஏலம் நடைமுறைக்கு வரும் வகையில் பொது ஏலம் கோரிடவும், மேலும் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தின் ஏல முன்வைப்புத்தொகையாக ரூ5,00,000/- என நிர்ணயம் செய்திடவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 2560/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1505**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வளாகத்தில் செயல்பட்டு வந்த தீயணைப்பு நிலையத்தின் அருகில் 10 x 8 என்ற அளவில் காலியிடத்தில் தகரப்பெட்டியில் டீக்கடை செயல்பட்டு வந்தது. இந்நிலையில் தினசரி மார்க்கெட் பகுதியல் பழைய கடைகளை அப்புறப்படுத்தி புதிய வணிக வளாக கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டு அதற்ககான கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் மேற்படி கடையானது கட்டுமானப்பணிகளுக்கு இடையூராக இருந்த காரணத்தினால் தற்காலிகமாக தகரப்பெட்டி கடையினை அகற்றி அதற்க்குண்டான வாடகை கேட்பு நிறுத்திவைக்கப்பட்டது.

தற்போது புதிய தினசரி மார்க்கெட் கட்டிட கட்டுமான பணிகள் முடிவடைந்த நிலையில் ஏற்கனவே தாம் அமைத்து இருந்த இடத்தில் மீண்டும் தகரப்பெட்டி கடை வைத்து நடத்திக்கொள்ளவும், அதற்கான வாடகைத் கேட்பினை நிர்ணயம் செய்து வழங்க கோரியுள்ளார்.

எனவே மேற்படி மனுதாரர்கோரியதன்படி அவருக்கு தினசரி மார்க்கெட் கிணறு உள்ள பகுதியின் முன்பக்கத்தில் 10 x 8 என்ற அளவு கொண்ட காலியிடத்தில் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி தகரப்பெட்டியில் டீக்கடை வைத்து நடத்திக்கொள்ளவும் .இன்றைய சந்தை மதிப்பீட்டின் படி வாடகை நிர்ணயம் செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1506**

28. இந்நகராட்சிக்கு சொந்தமான IUDP புதிய பேருந்து நிலையம் கடை எண் 19 (வரி விதிப்பு எண் 057/579) கொண்ட கடையினை குத்தகைதாரர் திருமதி.க.குணசுந்தரி என்பவர் நடத்தி வந்தார். இக்கடைக்கு வாடகை நிலுவை தொடர்பாக பல முறை அறிவிப்புகள் வழங்கப்பட்ட நிலையில் மேற்படி கடைக்கு குத்தகைதாரரால் நிலுவை வாடகைத் தொகை செலுத்தப்படாத நிலையில் இக்கடையினை 08.12.2025 அன்று நகராட்சியால் பூட்டி சீல்வைக்கப்பட்டு நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கடைக்குண்டான நிலுவை வாடகைத் தொகையினை குத்தகைதாரர்களது வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டிக்கொள்ளவும் மீதமுள்ள தொகையினை வசூலிக்க நீதிமன்ற நடவடிக்கை முலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், 08.12.2025 முதல் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதால் டிசம்பர் 2025 முதல் மார்ச் 2026 வரை உள்ள வாடகைத் தொகை ரூ.38052/- ஐ நீக்கம் செய்யவும். மேற்படி கடையினை பொது ஏலத்தில் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1507**

29. சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஆம் ஆண்டில் நடைபெறுவதற்கிணங்க, 106-கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத்தொகுதியில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 51 வாக்குச்சாவடிகளில் வாக்குச்சாவடி எண் எழுதும் பணி உட்பட வாக்குச்சாவடிக்குண்டான அனைத்து அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி மற்றும் சாய்வுதள வசதிகள், ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும் தேர்தல் நாளன்று வாக்காளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாமியானா பந்தல், மாதிரி வாக்குச்சாவடி அமைத்தல், வாக்குச்சாவடிக்கு தேவையான தடையின்றி மின்சார வசதி, கூடுதல் மேஜை மற்றும் நாற்காலிகள் (Tables & Chairs), Fedestal Fan, Wheel chair மற்றும் பிற வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.6,00,000/- (ஆறு இலட்சம்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 263/2026/சி1)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1508**

30. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 03/07/2007 இன் படி 9 ஆண்டுகள் குத்தகை முடிந்த இனங்களை மறுமதிப்பீடு செய்து வாடகை உயர்வு செய்ய உத்தரவிடப்பட்டதன் பேரில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழைய லாரி நிறுத்துமிட கடைகளுக்கு இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக மறு மதிப்பீடுகள் மேற்கொண்டு 01.04.2017 முதல் வாடகை மறுநிர்ணயம் செய்து அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது.

நகராட்சியால் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டதில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக இந்நகராட்சிக்கு சொந்தமான லாரி நிறுத்துமிடத்தில் கடை எண். 3A,4,5,6,7,8, மற்றும் 11 ஐ நடத்தி வரும் குத்தகைதாரர்கள் கோபிசெட்டிபாளையம் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S No 155/2018 ன் மூலம் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் 12.12.2025 -ம் தேதிய தீர்ப்புரையில் கீழ்கண்டவாறு உத்தர விடப்பட்டுள்ளது.

a) It is declared as all the notices dated 02.05.2018 & 18.06.2018 issued by defendant to all the plaintiffs are bull and void.

b) an order of mandatory injunction is passed against the defendant with a direction to calculate the re-fixed rent of Rs.7,000/- for the shops and the deposit sums of plaintiffs and to issue notices to all the plaintiffs accordingly having effect from 30.04.2018.

c) an order of permanent injunction is passed against the defendant , its men/agent/servants from vacating the plaintiffs from the 2 nd items of suit property without due process of law.

மேற்படி தீர்ப்புரையின் அடிப்படையில் பழைய லாரி நிலைய கடை எண்கள்: 3A, 4, 5, 6, 7, 8 மற்றும் 11 க்கு 30.04.2018 முதல் மறுமதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்ட வாடகைத் தொகை ரூ.7000/– என நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோபிசெட்டிபாளையம் நீதிமன்றத்தின் O.S No 155/2018 ன் தீர்ப்புரை நாள் 12.12.2025 தீர்ப்புரை தொடர்பாக மேல்முறையீடு செய்திட இவ்வலுவலக கடித ந.க.எண்.2083/2018/அ3 நாள்: 23.12.2025 ன் மூலம் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் அவர்களிடம் கோரப்பட்டதில் மேற்படி வழக்கினை கோபிசெட்டிபாளையம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாளிட்ட கடிதத்தில் சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார். அதன் பேரில் மேற்படி நீதிமன்ற உத்திரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்திட உரிய விபரங்களை நகராட்சி வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பினை பொருத்து மேற்படி வாடகை நிர்ணயம் மறு ஆய்விற்குட்பட்டது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில் O.S No 155/2018 நாள் 12.12.2025 ம் தேதிய தீர்ப்பினை நடைமுறை படுத்தும் பொருட்டு மேற்படி கடைகளுக்கு 01.04.2017 முதல் மறுமதிப்பீட்டில் உயர்வு செய்யப்பட்ட வாடகை வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது நீதிமன்ற தீர்ப்பாணையின் படி 01.04.2017 முதல் 29.04.2018 முதல் ரூ.7000/– என நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்ட தொகையினை 30.04.2018 க்கு பின்னர் உள்ள வாடகை தொகைக்கு கீழ்கண்ட பட்டியலின்படி கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை சரிசெய்யப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | கண்ணுசாமி கடை எண் 3A (057/589) **7000-2290 =4710** | சண்முகம் கடை எண் 4 (057/590) **7000-2290 =4710** | சிவக்குமார் கடை எண் 5 (057/591) **7000-1680 =5320** | சாந்தபா ஷா கடை எண் 6 (057/592) **7000-1280 =5720** | நாகேஸ்வரன் கடை எண் 7 (057/593) **7000 -1330 = 5670** | சிதம்பரம் கடை எண் 8 (057/594) **7000-3810 =3190** | நாராயண சாமி கடை எண் 11 (057/597) **7000-1400 =5600** |
|---|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| மே 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| ஜீன் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| ஜுலை 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| ஆகஸ்ட் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| செப்டம்பர் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| அக்டோபர் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| நவம்பர் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| டிசம்பர் 2017 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| ஜனவரி 2018 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| பிப்ரவரி 2018 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| மார்ச் 2018 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| ஏப்ரல் 2018 | 4710 | 4710 | 5320 | 5720 | 5670 | 3190 | 5600 |
| **மொத்தம் ரூ.** | **61230** | **61230** | **69160** | **74360** | **73710** | **41470** | **72800** |

ந,க,எண் : 2083/2018/அ3

**அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**
**அலுவலக குறிப்பு பதிவுசெய்யப்பட்டது. தீர்மான எண்.1509**

31. இந்நகராட்சியில் நகர்மன்ற கூட்டம், உயர் அலுவலர்களின் கூட்டம், பல்வேறு பணிக்கான கருத்துரு அனுப்புதல் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கைகள் போன்ற பல்வேறு பணிகளுக்கு பிரிண்ட் அவுட்/ ஜெராக்ஸ் எடுக்க வேண்டியுள்ளது. இதற்கு பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று எண்ணிக்கையிலான ஜெராக்ஸ் மெசின்களுக்கு தேவையான டோனர்கள் கொள்முதல் மற்றும் அதற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.202/2026/இ1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1510**

32. இந்நகராட்சி வார்டு எண் 22 மற்றும் 23 ல் அமைந்துள்ள BSNL நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு எண் 057/17948 மற்றும் 057/ 9834 வணிக பயன்பாட்டில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு 2022 –2023 முதல் அரையாண்டு முதல் 2025–2026 நடப்பாண்டு வரை சொத்துவரி செலுத்தக் கோரி உதவி பொது மேலாளர், BSNL. ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பி வரி செலுத்த தெரிவிக்கப்பட்டது.

